செ.வெ.எண்: 66/ஜீன் நாள்: 27.06.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

## போதைப்பொருள் நுண்ணறிவுப்பிரிவு மற்றும் செஞ்சிலுவை சங்கம் சார்பாக மாணவ மாணவியர் கலந்து கொண்ட சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தின விழிப்புணர்வு பேரணியை

## மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் ச.நடராஜன் இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் சுவார்ட்ஸ் மேல்நிலைப்பள்ளி வளாகத்திலிருந்து இன்று (27.06.2016) போதைப்பொருள் நுண்ணறிவுப்பிரிவு மற்றும் செஞ்சிலுவை சங்கம் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன் இ.ஆ.ப., அவர்கள், செஞ்சிலுவை சங்க மாணவ மாணவியர்கள் பங்கேற்ற சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தின விழிப்புணர்வு பேரணியினை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

அதன்பின்பு மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன் இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தததாவது:

போதைப்பொருள் உபயோகத்தினை முற்றிலுமாக ஒழித்து, ஆரோக்கியமான சமுதாயத்தினை உருவாக்கிட விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் ஆண்டுதோறும் ஜூன் மாதம் 26-ம் நாள் சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு, போதைப்பொருள் நுண்ணறிவுப்பிரிவு மற்றும் செஞ்சிலுவை சங்கம் சார்பாக இன்றைய தினம் இராமநாதபுரம் சுவார்ட்ஸ் மேல்நிலைப்பள்ளி வளாகத்திலிருந்து பள்ளி மாணவ மாணவியர்கள் பங்கேற்ற சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தின விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. இப்பேரணியில் மொத்தம் 13 பள்ளிகளைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட செஞ்சிலுவை சங்க மாணவ மாணவியர்கள் பங்கேற்றனர். இப்பேரணியானது, இராமநாதபுரம் சுவார்ட்ஸ் மேல்நிலைப்பள்ளி வளாகத்திலிருந்து துவங்கி சாலைத் தெரு, அரண்மனை மணிக் கூண்டு வழியாக மீண்டும் இராமநாதபுரம் சுவார்ட்ஸ் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நிரைவு பெற்றது.

போதைப்பொருள் பயன்படுத்துவதன் மூலம் நரம்புத் தளர்ச்சி, பசியின்மை, தூக்கமின்மை, முதுமை தோற்றம், பணத்திற்காக குற்றச் செயல்களில் ஈடுபடும் எண்ணம் உள்ளிட்ட பல்வேறு சமுதாய பிரச்சனைகள் ஏற்படுகின்றன. போதைப்பொருள் உபயோகத்தினை முற்றிலுமாக ஒழித்திடும் வகையில் தமிழ்நாடு அரசு பல்வேறு கடுமையான சட்டங்களை செயல்படுத்தி வருகிறது. போதைப்பொருள் பயன்பாட்டினை முற்றிலுமாக ஒழித்திட நாம் அனைவரும் உறுதியேற்க வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.என்.மணிவண்ணன், இ.கா.ப., இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.இரா.ராம்பிரதீபன், காவல் துணை கண்காணிப்பாளர் (போதைப்பொருள் நுண்ணறிவுப்பிரிவு) திரு.ஜி.ஆர்.அரசு, மாவட்ட கல்வி அலுவலர் திரு.ஹீசைன்கான், செஞ்சிலுவை சங்க செயலாளர் திரு.எம்.ராஹ்லான்ட் மருதம் உட்பட அரசு அலுவலர்கள், செஞ்சிலுவை சங்க பிரதிநிதிகள், செஞ்சிலுவை சங்க மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**